| வகுப்பு / பாடம் | 10 ம் வகுப்பு அறிவியல் - **அணுக்கரு இயற்பியல்** | அலகு | 6 |
|---|---|---|---|
| வினா வகை | சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. | மதிப்பெண் | 12 |

## 6. அணுக்கரு இயற்பியல்

**சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக**

1. மனிதனால் உருவாக்கப்பட்ட கதிரியக்கம் -------- எனக் கருதப்படுகிறது

அ) தூண்டப்பட்ட கதிரியக்கம் ஆ) தன்னிச்சையான கதிரியக்கம்

இ) செயற்கைக் கதிரியக்கம் ஈ) அ மற்றும் இ

2. கதிரியக்கத்தின் அலகு ----------

அ) ராண்டஜன் ஆ) கியூரி இ) பெக்கொரல் ஈ) இவை அனைத்தும்

3. செயற்கை கதிரியக்கத்தினை கண்டறிந்தவர்

அ) பெக்கோரல் ஆ) ஐரீன் கியூரி இ) ராண்ட்ஜன் ஈ) நீல்ஸ் போர்

4. கீழ்கண்ட எந்த வினையில் சேய் உட்கருவின் நிறை எண் மாறாமல் இருக்கும்

(i) $\alpha$ - சிதைவு (ii) $\beta$- சிதைவு (iii) $\gamma$ -சிதைவு (iv) நியூட்ரான் சிதைவு

அ) (i) மட்டும் சரி ஆ) (ii) மற்றும் (iii) சரி

இ) (i) மற்றும் (iv) சரி ஈ) (ii) மற்றம் (iv) சரி

5. புற்றுநோய் சிகிச்சையில் பயன்படும் கதிரியக்க ஐசோடோப்பு

அ) ரேடியோ அயோடின் ஆ) ரேடியோ கார்பன்

இ) ரேடியோ கோபால்ட் ஈ) ரேடியோ நிக்கல்

6. காமா கதிர்கள் அபாயகரமானது காரணம் அவை

அ) கண்கள் மற்றும் எலும்புகளை பாதிக்கும்

ஆ) திசுக்களை பாதிக்கும்

இ) மரபியல் குறைபாடுகளை உண்டாக்கும்

ஈ) அதிகமான வெப்பத்தை உருவாக்கும்

7. காமா கதிரியக்கத்திலிருந்து நம்மை பாதுகாக்க ------ உறைகள் பயன்படுகின்றன

அ) காரிய ஆக்சைடு ஆ) இரும்பு இ) காரீயம் ஈ) அலுமினியம்

LIVEWORKSHEETS

8. கீழ்க்கண்ட எந்தக் கூற்று/ கூற்றுகள் சரியானவை ?

i) α - துகள்கள் என்பவை ஃபோட்டான்கள்

ii) காமா கதிரியக்கத்தின் ஊடுருவுத் திறன் குறைவு

iii) α- துகள்களின் அயனியாக்கும் திறன் அதிகம்

iv) காமாக் கதிர்களின் ஊடுருவுத்திறன் அதிகம்

அ) (i) மற்றும் (ii) சரி ஆ) (ii) மற்றும் (iii) சரி

இ) (iv) மட்டும் சரி ஈ) (iii) மற்றும் (iv) சரி

9. புரோட்டான் - புரோட்டான் தொடர் வினைக்கு எடுத்துக்காட்டு

அ) அணுக்கரு பிளவு ஆ) ஆல்பாச் சிதைவு

இ) அணுக்கரு இணைவு ஈ) பீட்டா சிதைவு

10. அணுக் கரு சிதைவு வினையில் ${}_{6}X^{12} \xrightarrow{\alpha\text{- சிதைவு}} {}_{Z}Y^{A}$ எனில் A மற்றும் Z - ன் மதிப்பு

அ) 8 , 6 ஆ) 8 , 4 இ) 4 , 8 ஈ) கொடுக்கப்பட்ட தரவுகளில் காண இயலாது.

11. காமினி அணுக்கரு உலை அமைந்துள்ள இடம்

அ) கல்பாக்கம் ஆ) கூடங்குளம் இ) மும்பை ஈ) ராஜஸ்தான்

12. கீழ்கண்ட இந்தக் கூற்று/ கூற்றுகள் சரியானவை

( i ) அணுக்கரு உலை மற்றும் அணு குண்டு ஆகியவற்றில் தொடர் வினை நிகழும்

( ii ) அணுக்கரு உலையில் கட்டுப்படுத்தப்பட்ட தொடர்வினை நிகழும்

( iii ) அணுக்கரு உலையில் கட்டுப்படுத்தப்படாத தொடர்வினை நிகழும்

( iv ) அணுகுண்டு வெடித்து தொடர்வினை நிகழாது

அ) ( i ) மட்டும் சரி ஆ) ( i ) மற்றும் ( ii ) சரி

இ) ( iv ) மட்டும் சரி ஈ) ( iii ) மற்றும் ( iv ) சரி

ஆக்கம் செ. பழனியப்பன் அறிவியல் பட்டதாரி ஆசிரியர் . அரசு உயர்நிலைப் பள்ளி, கொடியாலம்.

LIVEWORKSHEETS